ஸ்ரீ ஹரி :

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 7 | மே 2002 | கானம் : 10

# மதுரமுரளி

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No.
TN / Chief PMG / 156 / 2002

Licensed to Post without
prepayment WPP No. 52 / 2002

வேணு : 7 மே 2002 கானம் : 10



“தோள் கண்டார், தோளே கண்டார்”

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar. Visit us at www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


| வேணு : 7 | மே 2002 | கானம் : 10 |
|---|---|---|


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸ்துதி | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 78 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 59 | 9 |
| 5. | வேதமும் விக்ரஹ ஆராதனையும் | 11 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 49 | 14 |
| 7. | ஸனாதனப் புதிர் - பகுதி - 13 | 18 |
| 8. | உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 6 | 20 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 53 | 22 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 7 (தொடர்ச்சி) | 25 |
| 11. | ஹரிதாஸர்களின் மகிமை | 27 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 80 | 29 |
| 13. | நாம ஸங்கீர்த்தனம் | 32 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸ்துதி

*வர்ஷே ஸ்ரீவ்ருஷநாமகேऽதி விமலே*
*புண்யேऽயனே தூத்தரே*
*மாகே கும்பகபூர்வபக்ஷஸுதிதௌ*
*ஸ்ரீபஞ்சமீபர்வணி ।*
*ரேவத்யாம் ரவிவாஸரேऽதிமஹிதே*
*ஸ்ரீகும்பலக்னே ஶுபே*
*ஸ்ரீஸ்ரீபூஸஹிதம் புராணபுருஷம்*
*ஸம்ப்ரேக்ஷிதம் பாவயே ॥*

*மஹாரண்ய விஹாரிணம் ஸுரஸிகம்*
*மத்வத்ரிமூர்த்நிஸ்திதம்*
*ஸ்ரீபர்ணாதி மஹாமஹீருஹதலே*
*ஸஞ்சிந்த்யமானம் புதை: ।*
*ஆதித்யாக்ஷரவித்யயாநவரதம்*
*ஸந்தீயமானம் முதா*
*மாதுர்யைகரஸே ஸரோவரதடே*
*ஸ்ரீஸ்ரீநிவாஸம் பஜே ॥*

— ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி

வாழ்க்கையில், அஹங்காரத்தினாலும், மமகாரத்தினாலும் தெரிந்தே பல பாவச்செயல்களில் ஈடுபட்டும், பலருக்கு துன்பம் செய்தும் வருகின்றோம். இப்படியெல்லாம் இருந்தும் கூட இறைவன் நம்மை எவ்வளவோ சௌக்யமாக வைத்துள்ளான். நாம் இன்னும் சற்று நல்லவர்களாக ஆனாலும்கூட போதும். இறைவன் நம்மை எப்படியெல்லாம் ரக்ஷிப்பான் என்பதைக் கூறவும்தான் வேண்டுமா?

**- ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

## 78

மும்பையைச் சேர்ந்த ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் அநேக தர்ம கார்யங்கள் செய்து வருகின்றார்கள். ஒருபுறம் லௌகீகமான தர்மங்கள், மற்றொரு புறம், வேதோக்தமான தர்மங்கள் என்று இரண்டிற்கும் தன்னுடைய செல்வங்களை எல்லாம் செலவழித்து வருகின்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள், அவரிடம், ''நீங்கள் எவ்வளவோ தர்மங்கள் செய்து வருகின்றீர்கள். அதே ஸமயம், உங்களுடைய சொந்த ஊரான பழைய கூடலூரில் உள்ள கோவில்களை எல்லாம் திருப்பணி செய்யவேண்டும், அப்பொழுதுதான் உங்களுடைய தர்மம் ஸபலமாகும்'' என்று கூறினார்கள்.

உடனே அவரும், தன்னுடைய சொந்த ஊரான பழைய கூடலூரில் உள்ள காமாக்ஷியம்பிகா ஸமேத ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஸன்னதி, விநாயகர், ஐயனார், ஸ்ரீ லக்ஷ்மி நாராயணபெருமாள் போன்ற ஸன்னதிகளுக்கு சென்ற வருடம் பிப்ரவரி மாதம் 4, 5, தேதிகளில் அதி விமர்சையாக கும்பாபிஷேகத்தை நடத்தினார். இதுவரையில், ஒரு தனிப்பட்ட மனிதர் அப்படியொரு கும்பாபிஷேகத்தை நடத்தி இருக்கவே முடியாது. அதைத் தொடர்ந்து இந்த வருடம் மார்ச் 31-ந் தேதி அன்று, ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் அதே ஊரில் உள்ள ஸ்ரீ வரதராஜ பெருமாள், மஹாமாரியம்மன், மற்றும் ஹரிஜன வீதியில் உள்ள மாரியம்மன் ஆலயங்களுக்கு கும்பாபிஷேகத்தை அதி விமர்சையாக நடத்தினார்.

ஸ்ரீ ஸ்வாமிகள், தன்னுடைய பூஜையுடனும், நம் பாடசாலை குழந்தைகளுடனும் அங்கு ஒரு வாரம் சென்று தங்கியிருந்தார்கள். மேற்படி கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தியதோடு மட்டும் அல்லாமல், தகுந்த மனுஷ்யர்களை ஏற்பாடு செய்து, கோவில் தெய்வங்களுக்கெல்லாம் சரிவர ஆராதனைகளும், உத்ஸவங்களும் நடத்திவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வருங்காலத்தில், கோயில்களில் ஆராதனம் செய்ய, விஷயம் தெரிந்த சிவாச்சார்யர்களும், பட்டாச்சார்யர்களும் உருவாக வேண்டுமே என்ற கவலை நம் ஸ்வாமிகளுக்கு எப்பொழுதும் உண்டு. அதன் பொருட்டுதான் சீர்காழியில் பகுதி நேரமாக ஒரு வைணவ ஆகம பாடசாலை நடத்தி வருகின்றார்கள். மும்பை ஸ்ரீ G.K.ராமமூர்த்தி அவர்கள் மூலம் பழைய கூடலூரில் ஒரு சிவாகம பாடசாலையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் மே 23-ந் தேதி ''அப்பய்ய தீக்ஷிதர் சிவாகம பாடசாலை'' ஆரம்பிக்கப்பட உள்ளது. இதில் ஒரு பத்து குழந்தைகள் தயாரானால், வருங்காலத்தில் ஒரு பத்து சிவாலயங்களில் க்ரமப்படி பூஜை நடக்குமே என்ற ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆசைதான் இதற்கு காரணம்.

ஸ்ரீ ஸ்வாமிகள், பேசிக்கொண்டிருக்கும்பொழுதெல்லாம், ''ஸமீபகாலமாக ஆன்மீகத்தில் ஒரு மறுமலர்ச்சியை'' காண்கின்றேன் என்பார்கள். சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நம் ஸ்வாமிகள், பௌர்ணமி அன்று திருவண்ணாமலை கிரி ப்ரதக்ஷிணம் செல்வதுண்டு. இரவில் செல்வதற்கே பயமாக இருக்கும். இப்பொழுதெல்லாம் பௌர்ணமி அன்று லட்சக்கணக்கில் ஜனங்கள் கிரிவலம் வருகின்றனர். ''ப்ரதோஷம்'' என்றால் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலின் உள்ளே, நுழையக்கூட முடியவில்லை. ஸமீபமாக, ஸ்ரீ ஸ்வாமிகள் திருப்பங்கூர் (நந்தனாருக்காக நந்தி விலகிய இடம்) சென்றிருந்தார்கள். முன்பெல்லாம் இந்தக் கோயிலில் கூட்டமே இராது. இப்பொழுது ''ப்ரதோஷம்'' அன்று பல ஊர்களிலிருந்து எல்லாம் பக்தர்கள் இங்கு கூடுகின்றனர். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

கோயில்களிலும், ஸமீபமாக பக்தர்கள் கூட்டம் பெருகி வருகின்றது. லௌகீகமாக செய்திகளை பிரசுரித்து வந்த பல ஸஞ்சிகைகள் எல்லாம் கூட இன்று ஆன்மிக விஷயமாகவும் எழுத ஆரம்பித்துவிட்டன. இதுநாள் வரை வெளிப்படையாக பக்தி செய்ய பயந்து வந்த பல அரசியல்வாதிகளும், இன்று வெளிப்படையாகவே பக்தி செய்ய ஆரம்பித்துவிட்டனர். அநேக வேதபாடசாலைகள்

நடக்கின்றன. சிவாகம பாடசாலைகள் அநேகம் நடக்கின்றன. வைணவ ஆகமம் மட்டும்தான், திருப்பதியைத் தவிர வேறு எங்கும் நடக்கவில்லை.

இன்றைய இளைஞர்களுக்கு ஸம்ஸ்க்ருதம், கர்நாடக ஸங்கீதம், வேதாந்த ஶாஸ்த்ரம் இவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பரவலாக ஏற்பட்டு வருகின்றது. இப்பொழுது திருப்பணி நடந்து குடமுழுக்கு காணும் பல கோயில்களும், இதற்கு முன்பு அநேகமாக சுமார் 40 அல்லது 50 வருடத்திற்கு முன்பு, பேருக்கு திருப்பணி செய்யப்பட்ட கோயில்களே ஆகும். இதையெல்லாம், ஶ்ரீ ஸ்வாமிகள் ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவர், ''இன்று திராவிடம் நீர்த்து போய்விட்டது'' என்றார். அதற்கு நம் ஸ்வாமிகள், மிகவும் வருத்தப்பட்டார்கள்.

''திராவிடம் நீர்த்துப் போய்விட்டது என்று கூறுதல் மிகவும் தவறு. திராவிட கலாச்சாரம் என்பது இறை நம்பிக்கை இல்லாத நாத்திக கலாச்சாரமா என்ன? ஆழ்வார்கள் பன்னிருவர், நாயன்மார்கள் அறுபத்திமூவர், முருகன் அருளால் பாடிய குமரகுருபரர், தன் பாடலினால் முருகனையே வரவழைத்த அருணகிரிநாதர், சிவபெருமான் என்று தெரிந்தும் குற்றத்தை கண்டுபிடித்த நக்கீரர், திருக்குறளை எழுதி, தாய் மொழியிலேயே படிப்பதுதான் தமிழை தாய்மொழியாக அடைந்ததன் பாக்யம் என்று தோன்ற வைக்கும் உயர்ந்த நூலை அருளிய திருவள்ளுவர்- இவர்கள் எல்லாம் நாத்திகர்களா என்ன! நம் முன்னோர்களுடைய திராவிட பண்பாடு என்பது இறைவழிபாடோடு கூடியதுதான். திராவிடம் என்றால் நாத்திகம் என்ற அளவிற்கு ஒரு மாயையை ஏற்படுத்திவிட்டார்கள்'' என்றார் ஶ்ரீ ஸ்வாமிகள். ''இப்பொழுது நாத்திகமே இல்லையா?'' என்று அவர் ஶ்ரீ ஸ்வாமிகளிடம் கேட்க, அதற்கு ஶ்ரீ ஸ்வாமிகள் ''நாத்திகமும் ஒரு மூலையில் இருக்கத்தான் செய்கின்றது. அது ஆஸ்திகத்தின் சீர்திருத்தத்திற்கு உதவும்'' என்றார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ஒரு கிராமத்தைச் சுற்றி இருக்க வேண்டிய கிராம தேவதைகள் என்ன? அவற்றையெல்லாம் ஒவ்வொரு கிராமத்திலும் ஏன் ப்ரதிஷ்டை செய்துள்ளார்கள்?*

பதில் : அநேகமாக, ஒவ்வொரு கிராமத்தின் எல்லையிலும், பிடாரி, ஐயனார், காளி, மாரியம்மன் போன்ற தேவதைகளை ப்ரதிஷ்டை செய்து வழிபடுவது உண்டு. கிராமத்துக்கு ஏற்படும் பீடைகளை அபஹரிக்கும்படியாக, பீட அபஹாரியாக பிடாரியையும், நன்றாக மாரி (மழை) வேண்டும் என்பதற்காக மாரியம்மனையும், கிராமத்து ஜனங்களுடைய செல்வமான மாடு கன்றுகளை ரக்ஷிப்பதற்காக வேண்டி ஐயனாரையும், தங்களுடைய கெட்ட காலங்களையும் மங்களகரமாக மாற்றி அமைப்பதற்காக பத்ரகாளியையும் ப்ரதிஷ்டை செய்து வழிபடுவார்கள்.

மேலும் கிராமதேவதைகளில் காத்தாயி, செல்லாயி, பேச்சாயி என்றெல்லாம் தெய்வங்களுக்கு பெயர் வைத்து வழிபடுவதுண்டு. காக்கும் கடவுளாக நாம் வணங்கும் அம்பாளான பார்வதியையே, அவர்கள் காத்தாயி என்றும், செல்வத்தைத் தரும் தேவதையாக நாம் வழிபடும் லக்ஷ்மியையே செல்லாயி என்றும், பேச்சிற்கு அதிதேவதையான ஸரஸ்வதியையே பேச்சாயி என்றும் அவர்கள் பெயரிட்டு வழிபடுவார்கள்.

*கேள்வி : கோயிலில் கர்ப்பக்ருஹத்தில்தான் பகவானுடைய ஸாந்நித்யம் இருக்கின்றது என்பதற்கு என்ன ப்ரமாணம்?*

பதில் : நாம் பெரிய பெரிய கோவில்களுக்கெல்லாம் செல்லும் பொழுது அந்த கர்ப்பக்ருஹத்தில் எந்த மூர்த்தி உள்ளாரோ, அதே மூர்த்தியின் பல ரூபங்கள், அதே அமைப்பில் அந்த கோவிலின் பல பாகங்களில் தென்படுவதுண்டு. சில கோவில்களில், கர்ப்பக்ருஹத்தில் உள்ள மூர்த்தத்தைவிட மிக அழகாகவும், பெரியதாகவும் கூட அவை இருப்பதுண்டு. ஆனால், அவற்றையெல்லாம் பார்க்கும்

பொழுது ஜனங்களுக்கு அத்தகைய ஒரு பக்தி சிரத்தை ஏற்படுவதில்லை. அதற்குக் காரணம், அத்தகைய மூர்த்தங்களில், ஸான்னித்தியம் இல்லாததேயாகும்.

*கேள்வி : ஒரு கோவிலில் தவறாமல் நடந்து வரும் வேத பாராயணம், பாகவதம், ராமாயணம் போன்ற இதிஹாஸ-புராண பாராயணம், திருவாராதனம், நாம ஸங்கீர்த்தனம் போன்றவற்றால் ஸான்னித்தியம் வளரும் என்பது சரிதானா?*

பதில் : இவற்றினாலெல்லாம் ஒரு கோவிலில் ஸான்னித்யம் ஏற்படும் என்பது உண்மைதான். ஆனால், இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக, அந்தக் கோவிலில் எழுந்தருளியுள்ள மூர்த்தியிடம் நமக்கு விஸ்வாசம் இருக்க வேண்டும். விஸ்வாசம் மட்டும் இருந்துவிட்டால் கூட போதும். எந்த பூஜையும் தேவையில்லை. விஸ்வாசம் இல்லாமல் எந்த பூஜை பண்ணினாலும் ப்ரயோஜனமில்லை. ஸ்ரீமத் பாகவதத்தில், ஹிரண்யகசிபு, 'இந்தத் தூணில் பகவான் இருக்கின்றானா?' என்று கேட்க, ப்ரஹ்லாதன் விஸ்வாசத்துடன் 'இருக்கின்றானே!' என்று கூற, பகவான் அந்தத் தூணில் ஆவிர்பவிக்கின்றான். நரஸிம்ஹ ஸ்வாமி அங்கு ஆவிர்பவிக்க வேண்டுமென்பதற்காக, ப்ரஹ்லாதன் எந்த ஒரு பூஜையோ, ப்ராணப்ரதிஷ்டையையோ, லக்ஷார்ச்சனையோ செய்யவில்லை. பகவான் அங்கு ஆவிர்பவித்ததற்கு காரணம், ப்ரஹ்லாதனின் மஹாவிஸ்வாசமே ஆகும்.

*கேள்வி : ஸாதாரணமாக, மஹாத்மாக்கள் அதிகம் பேசுவதில்லை. எல்லோருடனும் அதிகம் கலந்து பழகுவதில்லை. அமைதியாக அவர்கள் இருந்த போதிலும், அவர்கள் எப்பொழுதும்* "Serious" *ஆக இருப்பதுபோல் நமக்குத் தோன்றுவது ஏன்?*

பதில் : ஒரு குழந்தையின் உடல்நிலை மிகவும் மோசமாக இருக்கும் பொழுது, அந்தக் குழந்தையின் பெற்றோரின் மனோநிலை எப்படி இருக்கும்? அவர்களுடைய மனதானது வேறெந்த காரியத்திலும் ஈடுபடாது. அவர்களால் பரிஹாஸப் பேச்சுக்களில் ஈடுபடமுடியாது. வேறு யாராவது வந்து அவர்களிடம் ஸாதாரணமாக பேசினால்கூட, அவர்களுக்கு ஒரு எரிச்சல்தான் ஏற்படும். அவர்கள் ஏதாவது

பேசினால்கூட, அது அந்தக் குழந்தையின் உடல்நிலையைப் பற்றிய புலம்பலாகவே இருக்கும். அதுபோல், மஹான்கள் இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்து விடுபட ஏகாக்ர சித்தத்துடன் பகவானை வேண்டி வருவதால், அவர்களுடைய மனோநிலையும் இத்தகையதாகவே இருக்கும். ஒருவர் தன்னை மஹான் என்று கூறிக்கொண்டு, அவரிடம் அத்தகைய ஒரு Seriousness (ஏகாக்ரதை) காணப்படவில்லை என்றால், அவர் ஒரு மந்த அதிகாரி என்றுதான் அர்த்தம்.

***கேள்வி : உங்களைப் பார்ப்பதற்கு எவ்வளவோ பணக்காரர்கள் வருகிறார்கள். சில ஸமயங்களில், அவர்களுடைய வீடுகளில் எல்லாம் கூட நீங்கள் சென்று தங்குகிறீர்கள். இது எப்படி சரியாகும்?***

பதில் : ஒருவர் பணம் படைத்தவராக இருக்கிறார் என்பதற்காக, அவரை நாம் வெறுக்க வேண்டுமா என்ன? பணம் படைத்தவர்களிலும் பக்திமான்களும், நல்லவர்களும் உண்டு. ஏழைகளிலும் மூர்க்கர்களும், நாத்திகர்களும் உண்டு.

---

எப்பொழுதும், தமிழ் புதுவருடப் பிறப்பன்று ஸ்ரீ ஸ்வாமிகள் விஷு கனி கண்டு, எல்லோருக்கும் காசு தருவதுண்டு. இந்த வருடமும் அப்படி எல்லோருக்கும் கொடுத்தார்கள். ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்பு மீனாக்ஷி என்றொரு பக்தை, அந்த ஸமயம் தனது சொந்த ஊரான ரவண ஸமுத்திரத்தில் இருந்தார். அப்பொழுது கடைக்கு செல்வதற்காக வீதியில் நடந்து போனார். வருடாவருடம் நம் ஸ்வாமிகள் நமக்கு காசு கொடுப்பார்களே, இந்த வருடம் பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்று மிகவும் தாபத்துடன் நடந்துகொண்டே இருந்தார். அப்பொழுது என்ன ஆச்சர்யம். அப்படி நினைத்த உடனே கீழே ஏதோ பளபளவென்றிருந்தது. எடுத்துப் பார்த்தால் காசு. தான் நினைத்த உடனே தன்னுடைய ஆசையை ஸ்ரீ ஸ்வாமிகள் பூர்த்தி செய்துவிட்டார்கள் என்றே அவர் ஸந்தோஷப்பட்டார்.

**- நிர்மலாகிரி**

# வேத கதைகள் - 59

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## பஞ்சாக்னி வித்யை

ஆருணி என்ற முனிவருக்கு ஸ்வேதகேது என்ற பிள்ளை இருந்தான். அவன், தன் தந்தையிடம் எல்லா வித்யைகளையும் நன்கு கற்றான். ஆனால், தனக்கு நிகர் யாரும் இல்லை என்று அவனுக்கு கர்வம் இருந்தது. அப்பொழுது, பஞ்சாங்க தேசத்தில், ப்ரவாஹணன் என்ற அரசன், ஆண்டு வந்தான். அந்த அரசன் வித்வான்களை வரவழைத்து ஒரு சபை கூட்டினான். வித்வான்களும் அவையில் கலந்துகொண்டனர். அரசனாக இருப்பதால், அவனுக்கு வேலைக்காரர்கள் பலர், குடைபிடித்தல், ஸாமரம் வீசுதல் முதலிய பணிவிடை செய்தனர். அந்த அவைக்கு ஸ்வேதகேதுவும் சென்றான். அரசன் அவனை வரவேற்றான்.

அவன் கர்வமுள்ளவன் என்று அறிந்துகொண்டு அவன் கர்வத்தை அடக்க எண்ணி, ''ஓ குமாரனே!'' என்று அழைத்தான். ''உனக்கு உன் தந்தை எல்லா பாடங்களையும் கற்பித்தாரா?'' என்று கேட்டான். ஸ்வேதகேது அதற்கு, ''என் தந்தை எனக்கு எல்லாவற்றையும் கற்பித்துவிட்டார். என்னால் அறிந்துகொள்ள வேண்டியது இனி ஒன்றுமில்லை'' என்று கர்வத்துடன் பதில் உரைத்தான். உடன் அரசன், ''ப்ரஜைகள் இறந்த பிறகு எங்கு செல்கிறார்கள். இது தெரியுமா?'' என்று கேட்டான். தெரியாது என்று ஸ்வேதகேது பதில் கூறினான். இரண்டாவதாக, ''சென்றவர்கள் எவ்விதம் திரும்புகிறார்கள்?'' மூன்றாவதாக, ''தேவயானம் பித்ருயானம் என்று இவைகளின் பிரிவு தெரியுமா?'' நான்காவதாக, ''எந்த காரணத்தால் மேல் உலகம் நிரம்பாமல் இருக்கிறது''. ஐந்தாவதாக, ''ஆஹுதியில் புருஷன் என்ற பெயரை எவ்விதம் அடைகிறான்?'' என்ற கேள்விகளைக் கேட்டார். ''ஒன்றுமே எனக்குத் தெரியாது'' என்று ஸ்வேதகேது பதில் கூறினான்.

உடன் அரசன், ஸ்வேதகேதுவைப் பார்த்து, ''நீ என் சீடனாக ஆகு. உனக்கு இருப்பிடம் அளித்து நானே உபதேசம் செய்கிறேன்''

என்றார். ஸ்வேதகேது அவமானம் அடைந்து அரசனிடம் கல்வி கற்க விரும்பவில்லை. தன் வீட்டிற்கு திரும்பினான். ''ஓ தந்தையே! எனக்கு எல்லாவற்றையும் கற்பித்ததாக கூறினீர்கள். ஆனால், பஞ்சாங்க தேசத்து அரசன் ஐந்து வினாக்கள் எழுப்பினார். என்னால் ஒரு கேள்விக்கு கூட பதில் அளிக்க முடியவில்லை'' என்று கோபத்துடன் கூறினான். அப்பொழுது அவன் தந்தை, ''அரசன் கேட்ட ஐந்து வினாக்களுக்கு உன்னால் பதில் கூற முடியவில்லையோ! அரசன் கேட்ட அந்த வித்யையானது எனக்கும் தெரியாது. எனக்கு தெரிந்த யாவற்றையும் உனக்கு உபதேசித்து விட்டேன். ஆதலால், நாம் இருவரும் அரசனிடம் சென்று சீடனாக ஆகி, அரசனிடம் உள்ள வித்யையைக் கற்று வருவோம். வா!'' என்று அழைத்தார்.

உடன் ஸ்வேதகேது, ''நான் அரசன் முகத்தில் விழிக்க மாட்டேன்'' என்று தந்தையை மட்டும் அனுப்பினான். ஆருணியும் அரசன் அவையை அடைந்தார். அரசன், ஆருணியை அன்புடன் அழைத்து அர்க்யம் முதலியவைகளால் அர்ச்சித்தான். அரசனும், ''அவரைப் பார்த்து வேண்டிய வரம் அளிக்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றான். அப்போது ஆருணியானவர், அரசனைப் பார்த்து, ''என் பிள்ளையிடம் எந்த வினாக்கள் எழுப்பினாயோ அவற்றிற்கு விடைகளைக் கூறுவாயாக. இதையே நான் வரமாக உன்னிடம் வேண்டுகிறேன்'' என்று கூறினார்.

''யானை, தங்கம், மாடு, குதிரை, அழகான என்று எதைக் கேட்டாலும் அளிக்கிறேன். மனிதர்களால் அடைய வேண்டியது இவைகள் தான். உன் மகனிடம் நான் கேட்ட வினாக்கள் தேவர்களைச் சார்ந்தது. ஆதலால், அதைத்தவிர வேறு எதைக் கேட்டாலும் அளிக்கிறேன்'' என்றார். ஆருணியோ, ''எனக்கு அந்த கல்விதான் வேண்டும். வேறு எதையும் நான் விரும்பவில்லை'' என்றார்.

அரசனிடமிருந்து தான் அறியாத வித்யையை முனிவர் அறிந்தார். இந்தக் கதை மூலம் அந்த காலங்களில் பிறப்பால் உயர்ந்தவர்கள், தன்னால் அறியப்படாத கல்வியை கீழ்பட்டவர்களிடம் இருந்து கூட கல்வி கற்றார்கள் எனத் தெரிகிறது. உயர்ந்தவர்; கீழ்பட்டவரிடமிருந்து கல்வி கற்பதா? என்ற இறுமாப்பு முன்னோர்களிடம் இல்லை எனப்தும் தெரிய வருகிறது.

# ''வேதமும் விக்ரஹ ஆராதனையும்''

## ''ஸ்வப்ரகாச நிஜகுரு சரணஸ்மரணமேவ மார்க்கரம்''

இந்த ஸனாதன பாரத பூமி மற்றும் பூலோகமே ஸத்யமான பகவதாராதனத்தினாலேயே உஜ்ஜீவிக்கிறது. பகவதாராதனத்தினாலேயே ஸ்வர்க்ய ஸாலோக்யத்தை இந்த பூலோகத்தில்தான் அடைய முடியும். எனவேதான் அதர்வண வேதத்தில்,

***''இமா யாஸ்திஸ்ர: ப்ருதிவீஸ்தாஸாம் ஹ பூமிருத்தமா''***

இம்மூன்று உலகங்களில், இத்தரணியே ஸர்வோத்தமமானது என்று கூறுகிறது. அவ்வளவு மஹிமை வாய்ந்த பகவதாராதனத்திற்கு வித்திட்டது நம் ஹிந்து மதம். ஹிந்து மதத்திற்கு ஆணிவேராக உள்ளது வேதங்கள். அந்த வேதங்கள் விக்ரஹ ஆராதனையை அங்கீகரித்து உள்ளதா? என்பதை சற்று அனுஸந்தானிப்போம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், வேதோக்த்மான ஜீவனம் செய்யும் மனிதர்களாகவே ஸிந்து, ஸரஸ்வதீ நதிக்கரைகளில் தோன்றியவர்களே ஆர்யர்கள் எனும் வைதீக மதஸ்தர்கள். இவர்கள் வாழ்ந்த பூமியே ''ஆர்யாவர்த்தம்'' எனப்படுகிறது. இவர்கள் வாழ்ந்த காலமே வேதகாலம் என்று வரலாற்று அறிஞர்களால் கூறப்படுகிறது. இந்த வேத காலத்தில் இறைவழிபாடுகள் (Monothiesm) ஒரு கடவுளை வழிபடுவது, (Polythiesm) பல கடவுள்களை வழிபடுவது என்று இரு வகையாக இருந்தன என்று ஆராய்ச்சிகள் கூறுகிறது.

வேதத்தை அனுஸரித்து வாழ்ந்த இவர்களின் நாணயங்கள், பாத்ரங்களில் உள்ள முத்திரைகளின் மூலம், விக்ரஹ ஆராதனையின் தொடக்கம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிகிறோம். வேதம் பல இடங்களில் விக்ரஹ ஆராதனையை உறுதிப்படுத்துகிறது. தைத்ரீய ஸம்ஹிதையின் அந்தர்கதமான மஹாக்னிசயனத்தில், செங்கற்களை கணக்குப்படி அடுக்கி வைத்து நடுவில் தாமரை மலரில் ஸ்வர்ணமயமான புருஷாகார ப்ரதிமையை நிறுவுவார்கள்.

இதை தைத்ரீய ஸம்ஹிதையில்

*''ஹிரண்மயம் புருஷமுபததாதி''*

தங்கமயமான ஆண் பிரதிமையை (Golden man idol) நிறுவ வேண்டும் என்று கூறுகிறது. இது போன்று யஜுர் வேதத்தில்

*''ஸம்வத்ஸரஸ்ய ப்ரதிமா புருஷஶீர்ஷமுபததாதி''*

*''வயஸாம் வா ஏஷ ப்ரதிமயா சீயதே''*

என்ற வாக்யங்களினால் வேதம் ப்ரதிமாராதனத்தை (உருவ வழிபாடு) அங்கீகரிக்கிறது என்பதை அறிகிறோம். ஆனால், சில பாஷ்யக்காரர்கள் இதற்கு முரணாக கூறுகின்றனர். ஏனென்றால், யஜுர் வேதத்தில்,

*''ஸம்வத்ஸரஸ்ய ப்ரதிமாம் யாந்த்வா ராத்ரியுபாஸதே''*

ஸம்வத்ஸரத்தின் ப்ரதிமையாக என்பதற்கு, ப்ரதிநிதியாக ராத்ரியை உபாஸிக்கிறேன் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

*''ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி''*

என்பதற்கு உயர்ந்த அந்த புருஷனுக்கு ஈடான ப்ரதிமை கிடையாது என்ற இடத்தில், அவருக்கு ஈடான ப்ரதிநிதி கிடையாது என்று பொருள் கொள்கின்றனர். ஆனால், ப்ராசீன பாஷ்யக்காரர்கள், ப்ரதிமை என்பதற்கு ''உருவம்'' என்றே கொள்கின்றனர். எனவே, முரண்பாடுகள் இருப்பினும், விக்ரஹாராதனை வேதோக்த்தமானது என்று அறிகிறோம். அதே ஸமயம், லிங்க வழிபாடும் வேத வழியானதுதான் என்று பல வேத வரிகள் மூலம் நன்றாக அறிகிறோம்.

ரிக் வேதத்தில், சிவலிங்கங்களை வழிபடுபவர்களை ''ஶிஶ்நதேவர்கள்'' என்று அழைக்கிறது. அதே ஸமயம், ரிக் வேதத்தில், ''மர ஶிஶ்ந தேவா அஸ்மாகம் யஜ்ஞமபி கச்சேயு:'' யஜ்ஞங்களுக்கு ஶிஶ்ந தேவர்கள் வராமல் இருக்கட்டும் என்று கூறுவதால், வேதம் லிங்க உபாஸனைக்கு எதிரானது என்று கருதுவது சரியல்ல. ஏனெனில், ஶிஶ்ந தேவர்கள் எனும் பதத்திற்கு சாயனாச்சாரியார், வேங்கடமாதவர், யாஸ்கர் போன்ற வேதபாஷ்யகாரர்கள், ***ஶிஶ்ந தேவா ஶிஶ்நேன தீவ்யந்தி க்ரீடந்த இதி,*** அதாவது புலனடக்கம் இல்லாமல் காம வேட்கையில் உழல்பவர்கள்,

''ஶிஶ்நதேவர்கள்'' (without Self restraint) என்று பொருள் கொள்கிறார்கள். சிவலிங்க உபாஸனை, வேதோக்தமானது என்று அறிகிறோம். மஹாக்னிஶயனத்தின் உள்ளடக்கிய நாசிகேத ஶயனத்தின் வடிவம், சிவலிங்க உருவமாகவே இருக்கும். சக்ரசிதி எனும் இஷ்டகையும், சிவலிங்க வடிவமாகவே இருக்கும். பரமேஶ்வரனை சிவலிங்க ரூபமாக (Linga Worship) வழிபடும் முறையை, வேதங்களில் இவ்வாறு காண்கிறோம். யஜுர் வேத மஹாநாராயண உபநிஷத்தில் சிவோபாஸன மந்த்ரங்களில்,

***''ஏதத் ஸோமஸ்ய ஸூர்யஸ்ய ஸர்வலிங்கம் ஸ்தாபயதி''***

ஸூர்யசந்த்ர ரூபமாக இருக்கும் லிங்கத்தை, இந்த மந்த்ரங்களால் ஸ்தாபனம் செய்கிறார்கள் என்று கூறுகிறது. எனவே, வேதம் முறையான சிவோபாஸனத்தையும், லிங்க ப்ரதிஷ்டையையும் ப்ரதிபாதனம் செய்கிறது என்று அறிகிறோம். மிகவும் பழமையான புகழ்பெற்ற ஸோம்நாத்தில் உள்ள லிங்கமான ஸோமேஶ்வரரை ரிக்வேதத்தில், ***''யத்ரகங்கா ச யமுனா ச யத்ரப்ராசீ ஸரஸ்வதி யத்ர ஸோமேஶ்வரோ தேவஸ்தத்ர மாமம்ருதம்''*** கங்கை, யமுனை, ஸரஸ்வதி எனும் நதிகளின் தீரத்தில் உள்ள ஸோமேஶ்வரன் இருக்கும் அவ்விடத்தில் என்னை அழிவற்றவனாக செய், என்று ப்ரார்த்திப்பது போன்று அமைந்த இந்த மந்திரத்தினால் விக்ரஹாராதனையில் (Idol worship) புராதனத் தன்மையை நாம் நன்றாக அறியலாம்.

**– புலியூர் க. ராகவ சர்மா,**
**– புலியூர் க. சங்கர சர்மா,**
**– அம்புக்கோவில் M.S. ஸ்வாமிநாதன்.**

---

ஆயிரக்கணக்கான பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கும் ஒரு மந்தையில், கன்றுக்குட்டிகளை அவிழ்த்துவிட்டால் அந்தக் கன்றுக்குட்டி தாய்ப்பசுவிடம் எப்படி சரியாகச் சென்றுவிடுமோ, அதுபோல் ஒருவர் செய்யும் புண்யங்களும், பாபங்களும், தகுந்த காலத்தில் அவரவரிடம் வந்து சேரும்.

**— ஒரு பழமொழி**

# எந்தரோ மஹானுபாவுலு - 49

மாயை நீங்காத மனிதர்களால், பகவானின் தேஜோமயமான ரூபத்தை அதிக நேரம் ஸஹித்துக்கொள்ள இயலாது. மதுர**பா**வத்தில் பகவானுடன் பழகலாம். ஆனால், ஈஶ்வர ரூபத்தின் தேஜஸை தேவதைகளால் கூடத் தாங்க இயலாது. காலை போயிற்று, மாலை போயிற்று, இரவும் முடியலாயிற்று. ஆனால், ப்ரபுவின் பகவத் **பா**வம் நீங்கவில்லை. பக்தர்கள் உட்கார்ந்தபடியே இருந்தனர். ஒருவரும் உணவு உண்ணக்கூடச் செல்லவில்லை. காலை நீட்டிப் படுக்கவுமில்லை. நாற்புறமும் ப்ரபுவை சூழ்ந்துகொண்டு அமர்ந்திருந்தனர். இரவு முடிந்து, காலை பொழுதும் புலர்ந்தது.

பக்தர்கள் சற்று பயந்து இருப்பதை, அத்வைதாசார்யரும் பார்த்தார். இனி அதிக நேரம் மஹா ப்ரபுவின் தேஜஸை அவர்களால் தாங்க முடியாது என்று உணர்ந்து, ஸ்ரீவாஸிடம், ''நம்மைப் போன்ற ஸாதாரண ஸம்ஸாரிகள் ப்ரபுவின் இப்படிப்பட்ட தேஜஸை இன்னும் தாங்க இயலாதவர்கள். எனவே, ஏதாவது உபாயம் செய்து, இந்த **பா**வம் மறைய ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றார். ஸ்ரீவாஸரும், ''ஆம்! ஆம்! இந்த ஈஶ்வர ரூபத்தை விட, கௌர ரூபம்தான் நமக்கு அதிப்ரியமாக உள்ளது. நாம் சேர்ந்து அனைவருமாக மஹா ப்ரபுவிடம் ப்ரார்த்திப்போம்'' என்று கூற, எல்லோருக்கும் அந்த உபாயம் ஸம்மதமாயிற்று.

அனைவரும் கை கூப்பி ஸ்துதி செய்தனர். ''ஹே ப்ரபோ! தங்களது ஈஶ்வர ரூபத்தை முடித்துக்கொள்ளுங்கள். நாங்கள் இந்த தேஜஸ்ஸால் எரிந்து விடுவோம்! இதைத் தாங்கும் சக்தி இனி எங்களுக்கு இல்லை! தங்களது நிஜமான கௌர ரூபத்தைக் காட்டி மகிழ வையுங்கள்'' என்று வேண்டினர். அவ்வளவுதான்! ப்ரபு பெரிதாக ஹுங்காரமிட்டார். ''சரி, சரி ! அப்படியானால் நான் செல்கிறேன்'' என்று கூறிக்கொண்டு, ஸிம்மாஸனத்தில் இருந்து அசேதனமாக பூமியில் விழுந்தார். பக்தர்கள் அவரைத் தாங்கிப்

பிடித்து, அழகிய ஆசனத்தில் படுக்க வைத்தனர். ப்ரபு மூர்ச்சையாகவே, ஒரு ஸலனமுமின்றிக் கிடந்தார்.

மூர்ச்சையாகிக் கிடந்த ப்ரபுவிற்கு, விதவித உபசாரங்கள் செய்தனர். ஆனால், அவர் மூர்ச்சை தெளியவில்லை. ப்ரபுவை பரீக்ஷிக்கும் வகையில் ஸ்ரீவாஸரும், அத்வைதரும் ப்ரபுவின் ஸரீரத்தில் பலவித பரீக்ஷைகள் செய்து பார்த்தனர். மூக்கினருகில் கை வைத்துப் பார்த்தனர். ஸ்வாஸம் வந்து போகும் அறிகுறியே இல்லாமலிருந்தது. கை, கால்கள் ப்ரஜ்ஞை இன்றி இருந்தன. எந்த அங்கத்தைத் தொட்டாலும் அப்படியே கட்டை போல் கீழே விழுந்ததே தவிர, சைதன்யம் உள்ளது போலவே இல்லை. ப்ரபுவின் இந்த தசையைக் கண்டு அனைவரும் பயந்து நடுங்கினர்.

''சரி நான் செல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, ப்ரபு நம்மை தவிக்க விட்டுவிட்டு உண்மையிலேயே சென்றுவிட்டார்'' என பலர் வருந்தினர். பலர், ''இதோ தன் ஈஸ்வர ரூபத்தை முடித்துக்கொண்டு கௌர ஹரியாக இப்பொழுது எழுந்துவிடுவார்'' எனக் கூறினர். ஆனால், ப்ரபுவோ எழுந்திருக்கவே இல்லை. காலை முடிந்து மத்யானம் வந்தது. ப்ரபுவின் ஸ்திதியில் மாறுதல் இன்றி இருந்தது. அதேபோல் நினைவற்றுக் கிடந்தார். 30 மணிநேரமாக பக்தர்கள் உட்கார்ந்துகொண்டே இருந்தார்கள்.

செய்வதறியாமல் அனைவரும் கவலையுற்றனர். யாரும் சௌசம், ஸ்னானம் கூட செய்யச் செல்லவில்லை. பசி, தூக்கம் மறந்தனர். அனேகர், ப்ரபுவிற்கு நினைவு திரும்பவில்லையெனில், நாமும் அன்னபானமின்றி ப்ராணத்யாகம் செய்துவிடுவோம் என நிச்சயித்துக்கொண்டனர். முதல் நாள் அதிகாலை, ஸ்ரீவாஸ் பண்டிதர் வீட்டுக் கதவு எப்படித் தாளிடப்பட்டதோ அப்படியே அன்றும் கிடந்தது. ஒருவர் கூட கதவைத்திறந்து கொண்டு, வெளியே வரவில்லை. சசீமாதாவிற்கும் விஷயம் தெரியப்படுத்த வில்லை. ஒரு பக்தர், ''அனேகம் தடவை ப்ரபு மூர்ச்சையாகி விழுந்த ஸமயத்தில் எல்லாம், நாமஸங்கீர்த்தனத்தின் மதுரமான ஒலிகேட்டு சேதனம் அடைந்துள்ளார். இப்பொழுது நாமும் நாமஸங்கீர்த்தனம் செய்வோம்'' என்றார். உடனே பக்தர்கள் இனிமையான குரலில்,

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''* ॥

என்ற மஹாமந்த்ர கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தனர். இதைக் கேட்ட ப்ரபுவின் ஸரீரத்தில், ரோமாஞ்சிதம் ஏற்பட்டது. பக்தர்கள், ஆனந்தம் அடைந்தனர். பிறகு பதங்கள் பாட ஆரம்பித்தனர். ப்ரபுவின் சரீரத்தை அத்வைதாசார்யர் பரிசோதித்தார். நாஸிகையிலிருந்து மெதுவாக ஸ்வாசம் வந்து போவது தெரிந்தது. இதற்கிடையில், ப்ரபு பெரிதாக ஹுங்காரமிட்டார். இதைக் கேட்டதும் பக்தர்கள் ஆனந்தப்பட்டனர். ஜயஜயகாரம் செய்தனர். விண்ணை முட்டும் அளவு ஆனந்தக் கூச்சலிட்டனர். அவர்களது பாதத்வனியால் பூமியே அசைந்தது போலிருந்தது. சிலர் நடனமாடினர். சிலர் ஆனந்தத்தால் அழுதனர். சிலர் மயங்கி விழுந்தனர். சிலர் ஶங்கம் முழங்கினர். சிலர் ஶீதளமான ஜலத்தை ப்ரபுவின் திருவாயில் ஸமர்ப்பித்தனர்.

மஹா ப்ரபு கண்ணை கசக்கிக்கொண்டு, தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தாற்போல் எழுந்து தன்னைச் சுற்றியுள்ள பக்தர்களையும், அபிஷேக ஸாமக்ரியைகள் கீழே கிடப்பதையும் பார்த்து ஆச்சர்யம் அடைந்து, ''ஹே! இது என்ன? நாம் எங்கிருக்கிறோம்? ஏன் எல்லோரும் இங்கு கூடி இருக்கிறீர்கள்? ஏன் இப்படி விசித்திரமாக அனைவரும் உட்கார்ந்து இருக்கிறீர்கள்?'' என கேள்வி மேல் கேள்விகளைத் தொடுத்தார். யாரும் பதிலளிக்கவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்து மகிழ்ந்தனர். மஹாப்ரபு ஸ்ரீவாஸைப் பார்த்து ''பண்டிட்ஜி, என்ன நடந்தது உண்மையில்? நான் ஏதாவது சஞ்சலமாக நடந்துகொண்டேனா? நினைவற்ற நிலையில் அபராதம் ஏதும் செய்துவிடவில்லையே! உண்மையைக் கூறுங்கள்'' என்று கேட்டார்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு ஸ்ரீவாஸ் பண்டிதர், ''போதும்! இனியும் கஷ்டப்பட்டு நடிக்காதீர்கள். இங்கு யாரும் ஏமாறத் தயாராக இல்லை'' என்றதும் மஹாப்ரபு, மீண்டும் இரட்டிப்பு ஆச்சர்யமடைந்து, ''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? உண்மையைக் கூறுங்களேன்'' என்றார்.

விஷயத்தை முடிக்கும் விதத்தில் ஸ்ரீவாஸர், ''ஒன்றுமில்லை. நீங்கள் நாம ஸங்கீர்த்தனத்தின்போது அசேதனமாகிவிட்டீர்கள். உங்களை மறுபடி ஸாதாரண நிலைக்கு கொண்டுவர நாங்கள் மறுபடி நாமஸங்கீர்த்தனம் செய்தோம். அவ்வளவுதான்'' என்றார்.

மஹாப்ரபு வெட்கத்துடன், ''சரி! சரி! என்னால் உங்களுக்கு எல்லாம் பெரிய கஷ்டம் உண்டாகிவிட்டது. மிகவும் நேரமாகிவிட்டது. கிளம்புங்கள். ஸ்னானம், ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டாமா? காலை ஸந்த்யாவந்தனம் கூட இன்னும் செய்யவில்லையே!'' என்று கூறினார். பக்தர்களும் ஸந்தோஷத்துடன் கங்கையை நோக்கி ஸ்னானம் செய்ய சென்றனர். அவர்களது பாக்யம்தான் என்னே!

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

**மதுரமுரளி வருட சந்தா**

சந்தாதாரர்கள், ''மதுரமுரளி''க்கான தங்களது சந்தாவை ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே, ரொக்கம் / M.O. / DD யாக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண். தொலைபேசி எண். உள்ளிட்ட விவரங்களுடன் மிஷன் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம். தயவுசெய்து காசோலையாக சந்தாவை அனுப்ப வேண்டாம்.

| | | |
|---|---|---|
| உள்நாடு | : | ஆண்டு சந்தா ரூ. 60/- |
| | | மூன்றாண்டு சந்தா ரூ. 180/- |
| | | ஆயுள் சந்தா ரூ. 750/- |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ. 300/- |

# ஸனாதனப்புதிர் - 13

1. ஸுவர்ணபானுவிற்கும், நவக்ரஹ தேவதைகளில் கடைசி இருவருக்கும் என்ன சம்பந்தம்?
2. இந்திரனின் மனைவி யாருடைய பெண்? அவளுடைய பெயர்கள் யாவை?
3. இந்திரன், நமுசி என்ற அரக்கனை கொல்ல எதை உபயோகித்தார்?
4. விஶ்வேதேவர்களின் எண்ணிக்கை பத்து. அவர்களின் பெயர்கள் என்னென்ன?
5. அஶ்வினி குமாரர்களுடைய - பெற்றோர்களின் பெயர்கள் யாவை?
6. நவநாகர்களின் பெயர்களை பெரியோர்கள் நித்யானுஸந்தானத்தில் தினமும் சொல்கிறார்கள். அவர்களின் பெயர் என்ன?
7. யக்ஷர்களின் தலைவன் யார்? அவர்கள் தலைநகரத்தின் பெயர் என்ன? அது எந்த திசையில் இருக்கிறது?
8. நவநிதிகள் யாவை? இவற்றின் நாயகர் யார்?
9. அரிஷ்டநேமி, வினதா இவர்களின் குழந்தைகள் பெயர்கள் என்ன? இந்தக் குழந்தைகள் என்ன அலுவல்களில் ஈடுபட்டனர்?
10. விஶ்வகர்மா ஸ்ரீ க்ருஷ்ணனுக்காக நிர்மாணம் செய்த நகரத்தின் பெயர் என்ன? மயன் தர்மபுத்திரருக்கு இந்திரப்ரஸ்தத்தில் நிர்மாணம் செய்த சபையின் பெயர் என்ன?

ஸனாதனப்புதிர் - 13-க்கான விடைகளை
மே-25க்குள் அனுப்பவேண்டும்

## ஸனாதனப்புதிர் - 12-க்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கோதவரி | 5. | பரசுராமர் |
| 2. | லோமஷர் | 6. | பத்ரிநாத் |
| 3. | கர்ணன் | 7. | ஆயுர்வேதம் |
| 4. | ப்ரஹ்மசிரஸ் | 8. | அஜாத சத்ரு |

9. பரசுராம அவதாரம். நித்திரையில் இருந்த சிவனை பார்க்க அனுமதி மறுக்கப்பட்டதால்
10. காவேரி
11. கோதாவரி நதிக்கரையில்
12. லிங்கராஜ் மந்திர் - புவனேஸ்வர்
13. மார்க்கண்டேய புராணம்
14. மஹாபாரதத்தில்
15. உத்யோக பர்வாவில்

---

## ஸனாதனப் புதிர் - பகுதி - 12க்கான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ.** 250/-

K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 4.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

C. Sowdhamini, Sannadhi Street, Agraharam, Paranoor, Mugaiyoor (via)

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

K.N. Karthik Bhat, "Sowrabha" Mottethadka House, Kemminje (via), Darbe (P.O.) Puttur (Dt.) Karnataka.

---

## பிழை திருத்தம்

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| பிப்ரவரி 2002 பக்கம் 29 | Profoundity & Simplicity | Profundity & Simplicity |

# உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 6

நம்முடைய ஸனாதனமான மதத்தில் ப்ரஸித்தியாக ஷண்மதங்கள் இருந்து வருவதைப் பார்க்கின்றோம். கணபதியை முழு முதற்கடவுளாக வழிபடுதல், முருகப்பெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுதல், ஆதித்யனாகிய ஸூர்யனை முழுமுதற் கடவுளாக வழிபடுதல், சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுதல், திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடுதல், தேவியை முழுமுதற் கடவுளாக வழிபடுதல் என்பதே இந்த ஆறு மதங்களாகும். ஷண்மத ஸ்தாபனம் செய்த பெருமை ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளுக்கு உண்டு.

இந்த ஆறு மதங்களிலுள்ள ஒவ்வொரு மதமும், எந்த தெய்வத்தின் உபாஸனையை அடிப்படையாகக் கொண்டதோ, அந்த தெய்வம்தான் இந்த உலகத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய அனைத்திற்கும் காரணம் என்று கூறும். மற்ற தெய்வங்களெல்லாம், அந்த மதத்தின் உபாஸனை தெய்வத்தை வழிபட்டுத்தான் பல்வேறு சக்திகளைப் பெற்றதாகவும், அந்த தெய்வங்களையெல்லாம் நாம் வழிபடத் தேவையில்லை என்றும், அவைகளையெல்லாம் அற்பதெய்வங்கள் என்றும்கூட கூறும்.

அந்தந்த மதத்தை சார்ந்தவர்கள், தன்னுடைய தேவதையை வானளாவப் புகழ்ந்து, மற்ற தேவதைகளை நிந்திக்கவும் கூட துணிந்துவிடுவார்கள். இவற்றிற்கெல்லாம் ப்ரமாணமாக, இதிஹாஸ புராணங்களிலிருந்து பல மேற்கோள்களையும் காட்டுவார்கள். மற்ற தெய்வங்களைப் பற்றி பேசுவதும், நினைப்பதும், படிப்பதும், அவைகளைப் பார்ப்பதும்கூட பாபம் என்றிருக்கும் பரம ஏகாந்திகளும் கூட உள்ளனர்.

ஒரு தெய்வத்திடம் உள்ள அபரிமிதமான பக்தியினால்தான் அவர்கள் இப்படியுள்ளனர் என்பதால், ஶாஸ்த்ரங்களும் கூட அவர்களது பக்தியை ஏற்கின்றன. இந்த ஏகாந்த பக்தியைப் புரிந்து கொண்ட கம்பன், தன்னுடைய இராமகாவியத்தில் மிகவும் பொருத்தமான ஓர் இடத்தில் அதைக் கையாளுகிறான்.

பாலகாண்டத்தில், உலாவியற் படலத்தில், இராமனின் திருமேனியழகைக் கண்ட மக்களின் நிலையை

*''தோள் கண்டார் தோளே கண்டார்*
*தொடு கழல் கமலம் அன்ன*
*தாள் கண்டார், தாளே கண்டார்;*
*தடக்கை கண்டாரும், அ:தே;*
*வாள் கொண்ட கண்ணார் யாரே,*
*வடிவினை முடியக் கண்டார்?-*
*ஊழ் கொண்ட சமயத்து அன்னான்*
*உருவு கண்டாரை ஒத்தார்.*

கம்பராமாயணம் - 1081


என்ற பாடலில் இவ்வாறு விளக்குகிறான். ''தோள் கண்டார்'' என்று துவங்கும் பாடலில், இராமனின் ஒவ்வொரு அவயவத்தை கண்டவர்கள், அந்த அவயவத்தின் அழகைக் கண்டு மாளாது, மற்ற அவயவங்களின் அழகைப் பார்க்க மனமில்லாதவர்களாக இருந்தார்கள். மேலும், தான் பார்த்து அனுபவித்த அவயவத்தைக் காட்டிலும், இராமபிரானுடைய திருமேனியில், அழகான மற்றொரு அவயவம் இருக்க முடியாது என்று நிச்சயித்து, வாதிடவும் ஆரம்பித்துவிட்டனர். இதை ஓர் அழகான உதாரணம் மூலம் கம்பன் விளக்குகின்றான்.

*''ஊழ்கொண்ட சமயத்து அன்னான்*
*உருவுக் கண்டாரை ஒத்தார்''*

அதாவது, இந்த கட்டுரையின் ஆரம்பத்தில், ''தாங்கள் சார்ந்த மதத்தின் முழுமுதற்கடவுளைப் பற்றி அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் எவ்வாறெல்லாம் வர்ணிப்பார்கள், பேசுவார்கள் என்று எழுதினோமோ, அவ்வாறெல்லாம் மிதிலைவாழ் மக்களும் தாங்கள் கண்ட இராமனின் அவயவத்தைப் பற்றி பேசினார்கள்'' என்ற ஒரு அழகான உதாரணத்துடன் கம்பன் எடுத்துரைக்கின்றான்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 53

ஒரு சிறுவன், பல பேர் வேலை செய்யும் ஒரு மாட்டுப் பண்ணையில் வேலை செய்தான். காலையில் எழுந்தது முதல், மாட்டுக்கொட்டிலில் உள்ள சாணங்களை எல்லாம் எடுத்துக் கொட்டி, பின்பு நன்றாக சுத்தம் செய்து மாடுகளுக்கு எல்லாம் தீனிவைத்து, பால் கறந்து, குளிப்பாட்டி, அவைகளை மீண்டும் மேயவிட்டு கொட்டிலில் கட்டுவது வரை மிகவும் கடுமையான வேலைகள் இருக்கும். அவனுடைய முதலாளி மிகவும் பொல்லாதவர். சிறு தவறு நடந்தாலோ அல்லது செய்ய வேண்டிய வேலைகளை செய்யாமல் இருந்தாலோ, மிகவும் கடுமையாக தண்டிப்பார்.



அந்த ஊரில் ஒரு பிள்ளையார் கோயில் கட்டி புதியதாக பிள்ளையாரை ப்ரதிஷ்டை செய்வதற்கு, முதல் நாள், அந்த பிள்ளையாரை வீதிமுழுவதும் ஊர்வலமாக அழைத்து வரவேண்டும், என்று தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது இந்த மாட்டு பண்ணையில் வேலை செய்யும் சிறுவனை அழைத்து அவனை நன்றாகக் குளிக்கச் செய்தார்கள். அவன் உடுத்திக்கொள்ள பட்டு வேஷ்டி கொடுத்தார்கள். அதையும் உடுத்திக்கொண்டான். சந்தனங்கள் எல்லாம் பூசி விட்டார்கள். புஷ்ப மாலையெல்லாம் போட்டார்கள். பிறகு அவனுடைய தலையில் பிள்ளையாரை வைத்து வானவேடிக்கைகளுடனும், மேளதாளங்களுடனும், வேதகோஷங்களுடனும் ஊர்வலம் அழைத்துச் சென்றார்கள்.

வீதியில் அனைவரும் அவனை ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தனர். கற்பூரம் காண்பித்தார்கள். ஆரத்தி எடுத்தார்கள். தாகத்திற்கு பருகுவதற்கு பால், இளநீர் போன்றவைகள் தந்தார்கள். குடை பிடித்தார்கள். கால்களை அலம்பி சந்தன, குங்குமம் இட்டார்கள். அவனுக்கு ஸந்தோஷம் பிடிபடவில்லை. இன்று முதல் தன்னுடைய வாழ்க்கையே மாறிவிட்டதாக நினைத்தான். ஊர்வலம் முடிந்தவுடன் அதே நினைப்பில் மாட்டுப் பண்ணைக்குப் போன அவனுக்கு எந்த வேலையும் செய்யப் பிடிக்கவில்லை. அவனுடைய முதலாளி இருக்கும் அறைக்குச் சென்றான். அங்கு அவருக்காக வைத்திருந்த உணவுகளை எடுத்து உண்டான். அங்கு இருந்த கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்.

வந்து பார்த்த முதலாளிக்கு, கோபம் வந்து விட்டது. அவனை செம்மையாக அடித்துவிட்டார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் முன்புவரை நம்மை அவ்வளவு மரியாதையாக நடத்தினார்களே! நம்முடைய முதலாளிகூட நம்மை பூமியில் வீழ்ந்து வணங்கினாரே! இப்பொழுது என்னை ஏன் இப்படி அடிக்கிறார்? என்று நினைத்து அழுதுகொண்டே இருந்தான். அப்பொழுது அங்கு வேலை பார்க்கும் மற்றொருவர் அவனிடம், ‘‘முட்டாளே! இன்று காலை முதல் உனக்கு செய்து வந்த மரியாதைகள் எல்லாம் உனக்காக அல்ல. உன்னுடைய தலையில் உள்ள தெய்வத்திற்காக செய்யப்பட்டது. அதை உனக்கு என்று நீ தவறாக நினைத்ததனால்,

இந்த சங்கடம் உனக்கு வந்தது'' என்று கூறினார். அதை உணர்ந்த சிறுவனும் மீண்டும் முன்போல் நடந்து கொள்ள ஆரம்பித்தான்.

குழந்தைகளே! சிலர், நம்முடைய பதவிக்கு, அல்லது நம்மிடம் உள்ள செல்வத்திற்கு, அல்லது நம்மிடம் உள்ள வித்யைக்கு, அல்லது இதுபோல் நம்மிடம் உள்ள, ஒரு விசேஷத்திற்காகத்தான் நமக்கு மரியாதை கொடுப்பார்கள். அவை நம்மை விட்டுப் போய்விடுமாயின் நம்மை அவர்கள் சீண்டக்கூட மாட்டார்கள் என்பதை நாம் புரிந்துகொண்டு நடந்தால், நமக்கு எப்பொழுதும் அஹங்காரம் ஏற்படாது.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**



# ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் -7 (தொடர்ச்சி)

தனது கடைசி நாட்களில் அனேகமாக துர்கீமா திவ்ய ப்ருந்தாவனத்தில்தான் கழித்தாள் போலிருந்தது. அவளது அறை கல்லாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட ஸாதாரண அறையாக இல்லை. அது சின்மயமான ப்ருந்தாவனத்தின் ரத்னமணிமயமான குஞ்சமாகத் திகழ்ந்தது. நாற்புறமும் தாமரைகள் மலர்ந்து வண்டுகள் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தன. மயில்கள் ஆடிக்கொண்டிருந்தன. குயில்கள் பஞ்சம ஸ்வரத்தில் கானமிசைத்தன. ஒருநாள் ச்யாமாதேவி அந்த அறைக்குள் நுழையும்பொழுது, துர்கீமா, ''பார்த்து! பார்த்து வா! இந்தப்புறமாக வா!'' என்றாள். ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் அம்மா?'' என்று ச்யாமாதேவி கேட்க, ''அங்கே பார்! தாமரைகள் மலர்ந்துள்ளன. மிதித்து விடப் போகிறாயே என்பதற்காகச் சொன்னேன்!'' என்றாள். ச்யாமாதேவிக்குத் தாமரைகள் தென்படவில்லை. ஆனால், அவளுக்கு துர்கீமாவுக்கு புத்தி பிசகிவிட்டது என்றும் தோன்றவில்லை. தனக்குத்தான் அப்படிப்பட்ட திவ்யத்ருஷ்டி இல்லை என்ற வருத்தம் ஏற்பட்டது.

துர்கீமாவிற்கு, பார்க்கும் வஸ்துக்களெல்லாம் கோபாலனாகவும் எல்லா இடங்களும் அவனது திவ்யதாமமுமாகவும் தெரிந்தது போலும். ஒரு ஸமயம், ச்யாமாதேவி துர்கீமாவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்தாள். அங்கு ''கேரளஸ்வாமி'' என்று ஒரு ஸந்த் வந்திருந்தார். அவரை துர்கீமா நமஸ்கரித்தாள். தனக்கு க்ருபை செய்ய வேண்டும் என யாசித்தாள். ஸ்வாமிஜியோ, ''என்னிடம் உனக்குத் தர என்ன உள்ளது? அம்மா என் பை காலியாக உள்ளது! என்றார். ஆனால், துர்கீமா விடாமல், ''என்னை ஏமாற்றாதீர்கள் ப்ரபு. இந்த தாஸிக்கு ஏதாவது தரவேணும்'' என்று யாசித்தாள். ஸ்வாமிஜி, உடனே தன்னிடமிருந்த ஒரு முகரும் கண்ணாடி பாட்டிலை அவளிடம் தந்தார். அவள் தனது ஆச்சார்யர் ராமாநந்தரே தனக்குத்தந்த பகவத் விக்ரஹமென்று அதை பூஜ்ய**பா**வத்துடன் ஏற்றுக்கொண்டு அதை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

உலகிற்கு வெறும் கண்ணாடி பாட்டிலாகத் தென்பட்டது, துர்கீமாவிற்கு கண்ணனாகத் தெரிந்தது! அவளிடமிருந்து அதை யாராலும் திரும்பப் பெறமுடியவில்லை. அதற்கு பூஜை வேறு செய்ய ஆரம்பித்தாள். அவளது பக்தர்கள் அப்பொழுது ப்ருந்தாவனத்திலிருந்த சுதாமாபாபாவிடம் இதைப் பற்றிச் சொல்ல, அவர் துர்கீமாவின் குடிலுக்குள் நுழைந்து அந்த பாட்டிலை, ''எல்லாக் கண்ணனுக்கும் நீங்களே பூஜை செய்வீர்களா? நாங்களும் செய்ய வேண்டாமா!'' என்று கூறி எடுத்துச் சென்றாராம். அப்பொழுதுதான் துர்கீமா சும்மா இருந்தாளாம்!

ஒருநாள் துர்கீமா ச்யாமாதேவியிடம், ''எனக்கு மிகவும் தள்ளவில்லை. கோபாலனிடம் என்னை எடுத்துக்கொள் என்று பலமுறை சொன்னேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? நீ பட்டுப்புடவை உடுத்திக்கொள். நெற்றிக்கு சிந்தூரம் நிறைய அணிந்து கொள். என்னைக் கல்யாணம் செய்து கொள். அப்போது அழைத்துக்கொண்டு போகிறேன் என்றான். இப்படியெல்லாம் அவன் ஏனடி கிண்டல் செய்து பேசுகிறான்!'' என்று சொன்னாள்.

துர்கீமா, தனது மீதமுள்ள நாட்களை திவ்ய ப்ருந்தாவனத்திலேயேதான் கழித்தாள் என்று தோன்றும் வகையில் அவளது **பா**வமுத்திரைகள் இருந்தன. ப்ராக்ருதமான ப்ருந்தாவனம் மெல்ல மெல்ல அவளைவிட்டு விலகியது. ஆகஸ்ட் மாதம் 5-ந் தேதி 1977-ஆம் வருஷம் தனது 119-வது வயதில் தனது ப்ராக்ருத சரீரத்தை ப்ராக்ருத ப்ருந்தாவனத்தில் நீத்துவிட்டு அப்ராக்ருதமான சித்த கோபீதேஹத்துடன் திவ்ய ப்ருந்தாவனத்தில் கோபாலனுடன் கலந்தாள். துர்கீமாவைப் போல் கோபாலனின் திவ்ய சரணங்களில் பக்தி நமக்கும் ஏற்பட வேண்டும் என்று ப்ரார்த்திப்போம்!

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

# ஹரிதாஸர்களின் பெருமை

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள், எப்பொழுதும் மௌனமாகவே இருப்பார்கள். அபூர்வமாகத்தான் வாயை திறந்து பேசுவார்கள். அப்படியே பேசினாலும், அது வேதாந்த விஷயமாகத்தான் இருக்கும். தனிப்பட்ட முறையில் யாருக்கும் எந்த உபதேசமும் செய்வதில்லை. ஒரு ஸமயம், குஞ்சு ஸ்வாமிகள், பகவான் ஸ்ரீ ரமணரால் ஆகர்ஷிக்கப்பட்டு, அவரிடம் வந்து சேர்ந்தார். ரமண பகவானோ ப்ரத்யேகமாக யாருக்கும் எந்த உபதேசமும் செய்வதில்லை என்பதை அறிந்திருந்த குஞ்சு ஸ்வாமிகள், பகவான் ஸ்ரீ ரமணர் தன்னைப் பார்த்து முதன்முதலாக எந்த வார்த்தைகளை கூறுகின்றாரோ அதையே உபதேசமாக கொள்வது என்று முடிவு செய்தார்.

ஆஶ்ரமத்தில் வளர்ந்து வந்த நான்கு நாய்குட்டிகள் அங்கு சுடசுட வைத்திருந்த கஞ்சியை குடிக்க ஓடின. அதைக்கண்ட ஸ்ரீ ரமண பகவான், 'நான்கையும் பிடி, ஒவ்வொன்றாக விடு' என்றார். இதற்கு குஞ்சு ஸ்வாமிகள், என்ன அர்த்தம் கொண்டார் என்றால், பாராயணம், ஜபம், தியானம், வேதாந்த விசாரம் என்ற நான்கையும் செய்து வரவேண்டும் என்றும், ஜபம் நன்றாக வந்துவிட்டால் பாராயணம் தானாகவே விட்டுவிடும். தியானம் நன்றாக ஸித்தித்துவிட்டால் ஜபம் தானாக விட்டுவிடும். ஆத்ம விசாரம் ஸித்தித்துவிட்டால் தியானம் தானாகவிட்டு விடும் என்று அர்த்தம்கொண்டார்.

அது போலவே, ஹரி பக்தி செய்து வரும் ஒருவனால், மற்றவர்களைப் போல வைதீக கார்யங்களிலோ, லௌகீக கார்யங்களிலோ ஈடுபட முடியாது. ஸாக்ஷாத்காரம் ஏற்படும் வரையில் பல ஸாமான்ய தோஷங்களும் அவனிடம் காணப்படலாம். இவனை ஹரிபக்தன் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா? என்ற ஸந்தேகம் நமக்கு ஏற்படுவது ஸஹஜம்! ஆனால், துக்காரம் ஸ்வாமிகள் இத்தகைய பக்தர்களைப் பற்றி தன்னுடைய அபங்கத்தில் என்ன சொல்கின்றார் என்று சற்று பார்ப்போமா!

*துதாள காடவீ ஜாலீதரீ-*
*பாவேல தீ காய தேனூஸரீ*
*காகாசியா களா புஷ்பாசியாமளா*
*ஹம்ஸாசியாகளா காயஜாணே*
*மர்கட ஆங்கோளீ லாவியலேடீளே-*
*ப்ராஹ்மணாசே லீலே வர்து நயே*
*ஜரீ ஹரிபக்த ஜாலா கர்மப்ரஷ்ட-*
*துகாம்ஹணேச்ரேஷ்டதிஹீ லோகீ*

பசுவானது, ஸர்வவிதத்திலும் பூஜிக்கதக்கது. எல்லா தேவதைகளும், பசுவின் ஸரீரத்தில் வாஸம் செய்கின்றனர். ஸாமான்ய ஜனங்கள் பசுவின் ப்ரயோஜனம் ''பால் தருவதுதான் என்று நினைப்பார்கள். அப்படிப் பார்த்தால் கழுதைகூட தான் பால் தருகின்றது! கழுதை பால் தருவதால், கழுதையும் பசுவும் ஒன்றாகி விடாது. ஹம்ஸ பக்ஷி என்ற உயர்ந்த ஜாதி பக்ஷி ஒன்று உண்டு. பாலில் உள்ள தண்ணீரை விட்டு விட்டு, பாலை மட்டும் குடிக்கும் ஸாமர்த்யம் அதற்கு உண்டு. உயர்ந்த பெண் தேவதைகளின் நடையை, இந்த பக்ஷி நடைக்கு ஒப்பிடுவதும் உண்டு. ஒரு காகத்தின் கழுத்தில் புஷ்பமாலைகள் எல்லாம் சூட்டி விடுவதால் மட்டும் அது ஹம்ஸ பக்ஷி ஆகிவிடமுடியுமா என்ன?

ஒரு குரங்கை புண்ய நதிகளில் எல்லாம் நீராட்டி, அதற்கு த்வாதஶ திலகங்கள் எல்லாம் அணிவித்ததனால் மட்டும், வேதம் ஓதும் ப்ராஹ்மணரும் அதுவும் ஒன்றாகி விடுமா என்ன? தகுதி இல்லாதவர்களுக்கு வேஷ பூஷணங்கள் எல்லாம் தரித்து உபசாரம் செய்து புகழ்ந்தாலும் எப்படி தகுதியானது வந்துவிடாதோ, அதுபோல், தகுதி உள்ளவர்களிடம், சில குறைகள் காணப்பட்டாலும், அவர்கள் உயர்ந்தவர்களே! என்கின்றார்.

தமிழில் கூட, ***''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே!''*** என்ற மூதுரை உண்டு. அதுபோல், ஹரிதாஸர்கள், தனக்கு விதித்த லௌகீக, வைதீக கர்மங்களிலிருந்து வழுவிடினும் கூட, அவர்கள் மூன்று உலகங்களிலும் சிறந்தவர்கள் என்பதில் எந்த ஐயபாடும் இல்லை.

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 80

*''ஞானமில்லாது உன் ஆசையால் தளர்வற*
*ஞானந் தெரித்தருள் அருணாசலா* (தொடர்ச்சி)

நாம் காணும் இந்த உடம்பிற்கு ''ஸ்தூல உடம்பு'' என்று பெயர். இதற்கு மற்றுமொரு ஸரீரம் (உடம்பு) உண்டு. அது ''சூக்ஷ்ம ஸரீரம்'' எனப்படும். நாம் உறங்கும்பொழுது, கனவு காண்கிறோம். நாம் ஒரு கோவிலுக்குச் சென்று ஸ்வாமியை வணங்குவதாகவே, நாம் ஒரு மஹாத்மாவை தரிசனம் செய்வதாகவோ, நம்மை ஒரு புலி துரத்துவதாகவோ, இப்படி பலவிதமாக கனவு காண்கிறோம். அப்படி கனவு காணும்பொழுது, நம்மை நாமே பார்க்கிறோம் அல்லவா? அதற்குத்தான் ஸூக்ஷ்ம ஸரீரம் என்று பெயர். ஸ்தூல உடம்பின் மூலாதாரத்தில்தான் ஸூக்ஷ்ம சரீரம் இணைந்து உள்ளது.

ஸாதாரணமாக, உலகில் வாழும் மனிதனின் (உலகில் ஆடு, மாடுகள் வாழ்வது போல் வாழ்வது) மரணத்திற்கு பின், அவனுடைய ஸூக்ஷ்ம சரீரமானது, மூலாதாரத்தில் இருந்து பிரிந்து மனோமயமான சரீரத்தை பிடித்துக் கொண்டு, கிளம்பி பித்ரு லோகங்களுக்கோ, பாப, புண்ய லோகங்களுக்கோ சென்று, அங்கு தான் செய்த கர்மாவிற்கு தகுந்தபடி சுக, துக்கங்களை அனுபவித்து மறுபடி ஒரு ஜன்மாவை அடைகிறது. அப்படி புதிய ஜன்மாவில், கர்ப்பவாசத்தில் இருக்கும்பொழுது, உச்சந்தலை வழியாகத்தான் ஒரு ஜீவனுக்கு ப்ராணன் (உயிர்) ஏற்படுகிறது.

அப்படி கர்ப்பவாசத்திலிருக்கும்பொழுது, புழு, பூச்சிகளுக்கு இடையில் குழந்தை நெளிந்துகொண்டு இருக்கும். தாயார் சாப்பிடும் சாப்பாட்டின் உப்பு, காரம் அனைத்தும் குழந்தையை பாதிக்கும். அந்த ஸமயத்தில் அக்குழந்தைக்கு, தான் போன ஜன்மாவில் என்னவாக இருந்தோம். எவ்விதமான பாப, புண்யங்களை செய்தோம். எதற்காக இந்த ஜன்மா வந்துள்ளது. இப்பொழுது என்னவாக பிறக்கப் போகிறோம் என்று அனைத்தும் தெரியும். அப்பொழுது, ''போன ஜன்மத்தில் குருநாதர் வந்தாரே. உபதேசம்

செய்தாரே. எல்லாம் வ்யக்தமாக போய்விட்டதே. நாம் போன ஜன்மத்தில் அவர் சொன்ன உபதேசத்தை கேட்கவில்லையே. மறுபடியும் குருநாதர் வருவாரா!'' என்றெல்லாம் அக்குழந்தை நினைக்கும். ஆனால், பூமியில் பிறந்தவுடன் அக்குழந்தைக்கு அனைத்தும் மறந்துவிடும். அதற்குபின், அதற்கு ஒன்றும் தெரியாது.

'சித்ரகுப்தம்' என்று சொல்கிறோம். 'சித்திரம்' என்றால் படம். 'குப்தம்' என்றால் ஞாபகம். உயிர் பிரியும் காலத்தில், எமன் உயிரை கடைந்து எடுக்கும்பொழுது, நமக்கு எந்த ஒரு வஸ்துவின் (பொருள்) மேல் அத்யந்த ப்ரியம் இருந்ததோ, அது நமது ஹ்ருதயத்தில் வந்து நின்றுவிடும். அதுவே, நமக்கு அடுத்த ஜன்மாவிற்கு ஹேதுவாக அமையும்.

ஸ்ரீமத் பாகவதத்தில், ஜடபரதரின் சரித்திரம் வருகிறது. அவர் மிகப்பெரிய ராஜா. அவர், சொத்து, சுகம், பந்தம் அனைத்தையும் துறந்து, பெரிய தவவாழ்க்கை வாழ்ந்தும், ஒரு மானின் மீது ப்ரியத்தை வைத்ததால், அடுத்த பிறவியில் மானாகவே பிறந்தார் என்று வருகிறது. அதனால், நமக்கு எந்த வஸ்துவின் மேல் ப்ரியம், ப்ராணனில் ஊடுருவி உள்ளதோ, உயிர் போகும்பொழுது, அந்த வஸ்துவின் ஞாபகம் ஹ்ருதயத்தில் வந்து அடுத்த பிறவிக்கான விதையாக அமையும்.

ஸாதாரண ஜீவனுக்கு உயிர் போவதும், ஸூக்ஷ்ம சரீரம் கிளம்புவதும், திவ்யத்ருஷ்டி உள்ள ஒரு யோகியின் கண்களுக்கு நன்கு புலப்படும். இந்த ஸூக்ஷ்ம சரீரமானது உடம்பை விட்டு பிரிந்தவுடன் இந்த உடம்பை சுற்றிக்கொண்டேயிருப்பது கூட யோகிக்கு தெரியும். உயிர் போனவுடன் ஸரீரம் பிணமாவது, டாக்டர் வந்து பரிசோதிப்பது, உறவினர் அழுவது என்று அனைத்தையும் அந்த ஸூக்ஷ்மசரீரம் பார்த்துக்கொண்டு இருக்கும். பின்னர், அது தன்னுடைய பாப, புண்யங்களுக்கு ஏற்ப ஒரு கதியை அடைகிறது. மேலும், அது கிளம்பிபோன உலகங்களில் அதற்கு பகவத் தரிசனம் ஒன்றும் கிடைக்க போவதில்லை. பாப, புண்யங்களுக்கேற்ப சொர்க்க, நரக வாஸமும், மறுபடி ஜன்மாவும்தான் அதன் கதி. இப்படி ஸாதாரண வாழ்க்கை நடத்தும் ஜீவன்கள், மோக்ஷத்தை அடையும்வரை, பிறந்து, பிறந்து இறந்து போய்க்கொண்டே இருக்க வேண்டியதுதான்.

அடுத்ததாக வரும் பிறவியும், மனிதப்பிறவிதான் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. மனிதனாகவோ, மாடாகவோ, புலியாகவோ, மரமாகவோ எப்படி வேண்டுமானாலும் பிறக்க நேரிடலாம். அது அவரவர்களின் கர்மவினைகளைப் பொறுத்தது. இப்படி மோக்ஷம் அடையும்வரை பிறவிகள் வந்து கொண்டே இருக்கும்.

ஆஸ்பத்திரிக்குள் ஒருவரை அனுப்புகிறோம். எதற்கு? வியாதி குணமாவதற்குத்தான். வைத்தியர் நோயாளியின் உடல் குணமடையும்வரை, ஆஸ்பத்திரியில்தான் வைத்திருப்பார். பின்னரே, வெளியில் வர அனுமதிப்பார். அதுபோல், நம்மைப் படைத்த கடவுளானவர் நாம் மோக்ஷம் அடையும் வரையில், நம்மை இந்த உலகத்துக்கு அனுப்பி வைத்தவாறு இருப்பார்.

ஜீவன்முக்தி அடைந்தால்தான், இந்த உலகத்திற்கு வாராமல் இருப்போம். அது இல்லாமல், ஒன்றும் ப்ரயோஜனமில்லை. அதுவே, பேரானந்தம் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை. ஒருவர் பொய் சொல்லாமல் இருக்கிறார். நேர்மையான வாழ்க்கை நடத்துகிறார். அனைத்து நல்ல காரியங்களும் செய்கிறார். ஆயினும், அவருக்கு ஞானம் இல்லாவிடின், எந்த ப்ரயோஜனமும் இல்லை.

பள்ளிக்கூடத்திற்கு ஒரு பையனை அனுப்புகிறோம். அவன் சரியான யூனிபார்ம் (சீருடை) போட்டுக்கொள்கிறான். ஆசிரியர்களிடம் பணிவாக இருக்கிறான். ஒழுக்கமாகவும், நல்ல பையனாகவும் இருக்கிறான். ஆனால், படிக்க மட்டும் செய்வதில்லை. படிக்கவில்லை என்றால் என்ன ப்ரயோஜனம்? பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதே படிப்பதற்குத்தானே?

அதுபோல், ஒருவர் உலகில் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும், நல்ல பழக்கங்களுடனும் வாழ்ந்து வந்தாலும், அவருக்கு ஞானமில்லாவிடில் அனைத்தும் வீணே. ஏனெனில், பிறவி இல்லாமல் செய்துகொள்வதற்காகவே, கடவுள் நம்மை உலகிற்கு அனுப்பி உள்ளார். அதை அடையும் வரையில், அவரும் விடப்போவதில்லை. இதுவே ஸாதாரண ஜீவர்களின் கதி.

(தொடரும்)

## நாம ஸங்கீர்த்தனம்

சில வருடங்களுக்கு முன்பெல்லாம், ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், பரனூரிலேயே அநேகமாக தங்கியிருப்பார்கள். அந்த ஸமயம், விழுப்புரத்தில் வசித்து வந்த ஒரு வழக்கறிஞர், காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாள் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் பக்தி கொண்டவர். ஒரு ஸமயம், காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அந்த வழக்கறிஞரை அழைத்து, அவரிடம் மடத்தின் சார்பாக சில வாகனங்களையும், பொருளையும் கொடுத்து, ''இவைகளை எடுத்துக்கொண்டு நீ நேராக பரனூர் சென்று, ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளிடம் நான் கொடுக்கச் சொன்னதாகக் கொடுத்து, அவரை ஊர் ஊராகச் சென்று, ஹரிஜன வீதிகளில் எல்லாம் பகவந் நாமப்ரச்சாரம் செய்யச் சொன்னதாகச் சொல்'' என்று கூறினார்கள். இதற்கு ''மேலும், ஏதாவது உதவிகள் தேவையெனில், அவற்றையும் மடத்தின் மூலமாக செய்ய ஸித்தமாயுள்ளோம் என்றும் தெரிவிக்கவும்'' என்றும் கூறினார்கள்.

அதன்படியே, அந்த வழக்கறிஞரும் பரனூர் வந்து, ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளை தரிசித்து, ஸ்ரீ மஹா பெரியவாள் தெரிவிக்கச் சொன்ன விஷயங்களையெல்லாம் தெரிவித்து, வாகனங்களையும் ஸமர்ப்பித்தார். இவற்றையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்ட ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், ''நீங்கள் வாகனங்களைத் தருவதாலோ, மேலும் பல வசதிகளைச் செய்து தருவதாலோ நாமப்ரச்சாரம் நடந்துவிடாது. என்னிடம் நாமா இருந்தால், நாம ப்ரச்சாரம் தானாக நடக்கும் என்ற பதிலை ஸ்ரீ மஹா பெரியவாளிடம் ஸமர்ப்பிக்கவும்'' என்று கூறினார்கள். அதன்படியே, அந்த வழக்கறிஞரும் இந்த பதிலை ஸ்ரீ மஹா பெரியவாளிடம் தெரிவிக்க, அதைக்கேட்ட ஸ்ரீ மஹா பெரியவாளும் மிகவும் ஸந்தோஷித்தார்கள்.

**- பரனூர் ஸ்ரீ ஆண்டாளம்மாள்.**

**மங்களானி பவந்து**

## செய்திகள்

**மார்ச் 31-ந் தேதி**

GKR Charities, Mumbai / Chennai சார்பில் பழைய கூடலூர் அருள்மிகு ஆஜ்ஞா கணபதி திருக்கோயில், அருள்மிகு மஹாமாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருக்கரங்களினால் நடைபெற்றது.

**ஏப்ரல் 5-ந் தேதி**

மஹாரண்யம், ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் மண்டலாபிஷேகம் பூர்த்தியை ஒட்டி, காலை 9 மணிக்கு ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்ஜனம் நடைபெற்றது. மாலை 4 மணி முதல் 7 மணி வரை அஷ்டபதிபஜனையும் ராதா கல்யாண உத்ஸவமும் நடைபெற்றது.

**ஏப்ரல் 14-ந் தேதி – தமிழ்வருடப்பிறப்பு – விஷுகனி**

சென்னை, ப்ரேமிகபவனத்தில் தமிழ் வருடபிறப்பை ஒட்டி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. இரவு 7 மணியளவில் ப்ரபல ஜோதிட மேதை, ப்ரஹ்மஸ்ரீ சேஷாத்ரி அவர்கள் Ex-Principal, Sanskrit College, Chennai புத்தாண்டு பஞ்சாங்க பலன் பற்றி பேசினார்கள்.

**ஏப்ரல் 21-ந் தேதி — ஸ்ரீ ராம நவமி**

சென்னை ப்ரேமிகபவனத்தில் காலை 7 மணியளவில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்ஜனம் நடைபெற்றது. பகல் 10 மணி முதல் 12 மணி வரை ராகவ ஶதகம் கீர்த்தனம் செய்யப்பட்டது. 12½ மணியளவில் ஸ்ரீமத் ராமாயண அவதாரக் கட்டம், பட்டாபிஷேக கட்டம் பாராயணம் செய்யப்பட்டது. பக்தர்களுக்கு நீர்மோர், பானகம் ப்ரஸாதம் வழங்கப்பட்டது. மதியம் 2 மணி முதல் அஷ்டபதி பஜனையும், இரவு 7 மணி முதல் 9 மணி வரை சூர்ணிகை, லக்னாஷ்டகம் சொல்லி ஸீதா கல்யாணம் நடைபெற்றது. ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டது.

**ஏப்ரல் 23-ந் தேதி — ஏகாதஶீ**

சென்னை, வளசரவாக்கம், ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களின் க்ருஹத்தில் ஏகாதஶி பஜனை, நம் ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**மே 13-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை**

சென்னை, கோடம்பாக்கம், சுப்ரமணிய தெரு, ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவ சபா சார்பில், ஸ்ரீ ஸ்வாமிகள், மஹான்களின் சரித்ரங்களைப் பற்றி உபன்யாஸம் செய்கின்றார்கள்.

**மே 26-ந் தேதி — வைகாசி அனுஷம்**

நம் மிஷன் சார்பில், ஸ்ரீ மஹாபெரியவாள் ஜெயந்தி மஹோத்ஸவம் நடைபெறும்.

**மே 27, 28 தேதிகள்**

சென்னை, மேற்கு மாம்பலம், அயோத்யா மண்டபத்தில், ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி பக்த ஜன ட்ரஸ்ட் சார்பில் நடைபெற இருக்கும் ஸ்ரீ மஹா பெரியவாளின் 109வது ஜயந்தி மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் செய்கிறார்கள்.

---

சென்ற ஆண்டில், குஜராத் மாநிலத்தில் பூகம்பம் ஏற்பட்டதால் அந்த மாநிலம் பேரழிவை ஸந்தித்தது. அதன் பிறகு ஸமீபமாக சென்னையிலும், அதன் சுற்றியுள்ள சில இடங்களிலும் பூகம்பம் ஏற்பட்ட போதிலும், எந்த பெரிய சேதமும் ஏற்படவில்லை. பூகம்பம் என்றவுடன், ஸ்ரீ காஞ்சி பெரியவாள் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுடன் உடன் இருந்து கைங்கர்யம் செய்து வந்த ஏகாம்ர ஶாஸ்திரிகள் சொன்ன ஒரு ஸம்பவம் நினைவுக்கு வந்தது.

மஹாராஷ்டிராவில் உள்ள ஸதாராவில் ஒரு ஸமயம் ஶங்கராச்சார்யர் மடத்தில் கோகுலாஷ்டமி தினத்தன்று ஸ்ரீ மஹாபெரியவாள் தங்கியிருந்தார்கள். மாலை சுமார் 5 மணியளவில் அவர் தங்கியிருந்த தகர கொட்டகை ஆட ஆரம்பித்தது. அருகில் இருந்தவர்கள் 'பூகம்பம்' 'பூகம்பம்' என கூச்சிலட்டவாறே ஓடி வந்தார்கள். ஸ்ரீ மஹாபெரியவாள், ''என்ன? பூகம்பமா?'' என்றவாரே தனது காலை மாற்றி போட்டு பூமியை ஒரு அழுத்து அழுத்தினார். அந்த க்ஷணமே பூகம்பம் நின்றுவிட்டது.

**டாக்டர். ஆ. பாக்யநாதன்**